**நகரமன்றம், குடியாத்தம்** **நாள் : 13.05.2020**

# அறிவிப்பு

**2020-ம் ஆண்டு மே மாதம் 14-ம் தேதி வியாழன் கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகராட்சி தனி அலுவலர் அவர்கள் அறையில் நிகழ்ச்சி நிரலில் கண்டுள்ள பொருள்களை முடிவு செய்ய நகரமன்றத்தின் சாதாரணக் கூட்டம் நடைபெறும்.**

## முன்னிலை : திரு.எச்.இரமேஷ்,பி.எல்., நகரமன்ற தனி அலுவலர்

## கூட்ட நிரல்

| வ. எண் | பொருள்கள் மே 2020 சாதாரண கூட்டம் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| 1 | இந்நகராட்சியில் உள்ள அனைத்து பிரிவுகளுக்கும் தேவையான படிவங்கள், எழுது பொருட்கள் 2020-2021 ஆம் ஆண்டிற்கு அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு நிறுவனத்தில் இருந்து வாங்க ஆகும் தோராய செலவு ரூ.3.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்திற்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.0676/பி4/2018) | **48** | அனுமதிக்கப்பட்டது |
| 2 | குடியாத்தம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சாலையோரங்களில் வீடற்று உள்ள நபர்களுக்கு தேசிய நகர்புற வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் (NULM) கணக்கெடுப்பு செய்தும், மேற்படி கணக்கெடுப்பு செய்யப்பட்ட நபர்கள் தங்கிக் கொள்ள இத்திட்டத்தின் SUH (Shelter for Urban Homeless)-ன் கீழ், ஏற்கனவே வார்டு எண்.06, பிளாக் எண்.02, நகரளவு எண்கள் 195 (ம) 196 கொண்ட என்.ஜி.ஓ. காலனி இடத்தில் மத்திய மற்றும் மாநில அரசு வழங்கும் முழு மான்யத் தொகையில் கட்டிடம் கட்ட இடம் தேர்வு செய்யப்பட்டதை மாற்றி தற்போது வார்டு எண்.05, பிளாக் எண்.09, நகரளவு எண்.669/1 மேல் ஆலத்தூர் சாலையில் உள்ள ஆணையாளர் குடியிருப்பு வளாகத்தின் வட கிழக்கு | 49 | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | பகுதியில் மத்திய மற்றும் மாநில அரசு வழங்கும் முழு மாண்யத் தொகையில் கட்டிடம் கட்ட மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.30/2018/SUH/எப்1) | | |
| 3. | நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் எண்.1391/பி3/2017 நாள் : 24.03.2017-ல் பொது சுகாதாரப் பிரிவில் தனியார் மயம் மூலம் 12 வார்டுகள் (16, 17, 27, 28, 29, 30, 31, 32, 33, 34, 35 மற்றும் 36) கொண்ட துப்புரவுப் பணிகள் தனியார் மயமாக்குதலுக்கு 3 ஆண்டுகளுக்கு அனுமதி பெறப்பட்டதன் பேரில் திரு.லோகேஷ் என்பவர் பணி செய்து வருகிறார். எனினும், மேற்படி அனுமதி காலம் 01.06.2020 அன்றுடன் முடிவடைகிறது. தற்போது கொரோனா தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால் ஓராண்டுக்கு இப்பணியை 02.06.2020 முதல் திரு.லோகேஷ் என்பவரின் நிறுவனம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டி மன்றப் பொருள் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.1741/2012/எச்1) | 50 | **அனுமதிக்கப்பட்டது** |
| 4. | இந்நகராட்சிக்கு எதிராக திரு.T.கணேசன் என்பவர் வேலூர் மாவட்ட நீதிமன்றத்தில் சொத்து தொடபான வழக்கில் மேல்முறையீடு செய்துள்ள வழக்கு எண்.WPA.27/2019-க்கு நகராட்சி தரப்பில் திரு.கே.எம்.பூபதி நகராட்சி வழக்கறிஞர் ஆஜராகவும் அதற்கான வழக்கறிஞர் கட்டண தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : 1) மன்றம் அனுமதி வழங்கலாம். 2) நகரமன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.அ3/0080/2020) | 51 | **அனுமதிக்கப்பட்டது** |
| 5. | இந்நகராட்சியில் 2020-2021 ஆம் ஆண்டு பொது நிதி திட்டத்தில் கீழ்காணும் பணிகள் மேற்கொள்ள 06.05.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது- வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | 52 | **அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | <table><tr><th>வ. எண்</th><th>பணியின் விவரம்</th><th>ஒப்பந்தப்புள்ளி விவரம்</th></tr><tr><td>1</td><td>குடியாத்தம் நகராட்சி குடிநீர் வினியோகத்திற்கு திரவ குளோரின் சப்ளை செய்தல்<br>மதிப்பீட்டு தொகை ரூ.25,00,000/-</td><td>1. J.J.ஆனந்தகுமார் - 0.49% மதிப்பீட்டைவிட குறைவு<br>2. DCN கன்ஸ்ட்ரக்ஷன் - 0.00% மதிப்பீட்டு விகிதம்</td></tr></table><br>**அலுவலககுறிப்பு** : வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய J.J.ஆனந்தகுமார் அவர்களின் ஒப்பந்தப்புள்ளிக்கு மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.இ1/2078/2019) | | |

**ஆணையாளர் / தனி அலுவலர்**
**குடியாத்தம் நகராட்சி**